காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்
தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள் 1

(முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved)

முறிகண்டி நேசக்கரங்கள் கனடா அமைப்பின் அனுசரணையில் காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகத்தின் ஏற்பாட்டில 2020 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்கருதி வெளியிடும் கோவிட் 19 விடுமுறைகால மாதிரி வினாத்தாள்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை _ 2020

1 மணித்தியாலம்

வினாத்தாள் - I

சுட்டெண்:.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவுக்கும் உரிய **சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும்	

www.keou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்


WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

■ 1, 2 ஆகிய வினாக்களில் வேறுபட்ட உருவினைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

01.



(1) (2) (3)


02.



(1) (2) (3)


■ 3, 4 ஆகிய வினாக்களில் உருவில் காணப்படும் வெற்றிடத்திற்கு மிகவும் பொருத்தமான உருவினைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

03.



(1) (2) (3)

04.



(1) (2) (3)

■ 5, 6 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம் அவ்விரு கூட்டங்களையும் **சேராதது** யாது?

05. லீற்றர், மீற்றர், கிலோமீற்றர், கிலோகிராம், கிராம், சென்ரீமீற்றர்

(1) மீற்றர் (2) லீற்றர் (3) கிராம்

06. ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்

(1) பெப்ரவரி (2) ஏப்ரல் (3) ஜூன்

www.lkedu.lk

சுட்டெண்:.....

■ பின்வரும் பாடலை வாசித்து 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

ஊக்கம் கொண்டு உழைத்திடின்
உயர்ந்த வாழ்வு கிடைத்திடும்
தூக்கம் மிகுந்த சோம்பலால்
துவண்டு போகும் வாழ்க்கையே!

07. உயர்ந்த வாழ்வு கிடைத்திட யாது செய்ய வேண்டும்?

(1) நன்றாகத் தூங்க வேண்டும்

(2) ஊக்கத்தோடு உழைக்க வேண்டும்

(3) சோம்பலோடு இருக்க வேண்டும்

08. இப்பாடலின் மூலம் நீர் பெற்றுக் கொள்ளும் படிப்பினை யாது?

(1) சோம்பலைத் தவிர்த்து முயற்சியுடன் கற்க வேண்டும்

(2) தினமும் நீண்ட நேரம் உறங்க வேண்டும்

(3) ஊக்கத்தோடு நன்றாகப் படிக்கக் கூடாது

■ 9, 10 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது தோன்றும் உருவைத் தெரிவு செய்க.

09.



(1) (2) (3)


10. **EXAM**

(1) **MAXƎ**

(2) **EXAM**

(3) **ƎXAM**

11. பின்வரும் உருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(1) 4

(2) 5

(3) 6

www.ikedu.lk


12. " திகதி " என்ற சொல்லை எண் குறியீட்டில் எழுதினால் வரும் விடையினைத் தெரிவு செய்க.

(1) 214 (2) 223 (3) 535

13. "2528" என்ற இலக்கங்களால் பின்வரும் எச்சொல்லை எழுத முடியும்.

(1) வட்டம் (2) வடிவம் (3) வசனம்

14. கீழே தரப்பட்டுள்ள உருவைச் சுற்றி ஆறு பக்கங்களிலும் நிறம் பூசப்படுகின்றது. பின்னர் கோடுகள் வழியே சிறிய சதுரமுகிகளாக வெட்டப் படுகின்றது. தற்போது நிறம் பூசப்படாத எத்தனை சிறிய சதுரமுகிகள் பெறப்படும்.




(1) 1

(2) 6

(3) 8


■ 15, 16 ஆகிய வினாக்களுக்கு முதலிரு உருக்களையும் அவதானித்து மூன்றாவது உருவின் வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

15.




(1) 11 (2) 20 (3) 33

16.



(1) 12 (2) 27 (3) 24

17. உருவில் உள்ள இரு சதுரங்களும் ஒன்றை ஒன்று ஒத்தவை. இதில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு 10 சதுர சென்ரிமீற்றராகும். நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு என்ன?



(1) 80 சதுர சென்ரிமீற்றர்


(2) 70 சதுர சென்ரிமீற்றர்

(1) 60 சதுர சென்ரிமீற்றர்

[பக் 5 ஐப் பார்க்க


www.lkedu.lk

18. கடதாசித் துண்டொன்றை நான்காக மடித்து உருவில் உள்ளவாறு துளையிட்டு மீண்டும் விரிக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

■ கீழே உள்ள செயற்பாட்டை விளங்கி 19, 20 ஆகிய வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.




19.  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 4 (2) 6 (3) 8

20.  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 24 (2) 28 (3) 32


21. உரு A இல் உள்ள தராசு சமனிலையில் உள்ளது. உரு B இல் உள்ள தராசு சமனிலையில் வருவதற்கு தேவையான உருத்தொகுதி யாது?





(1)  (2)  (3) 

www.ikedu.lk


22. இலங்கை, கிழக்குமாகாணம், திருகோணமலை ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பைச் சரியாக விளக்கும் படம்


(1) 

(2) 

(3) 

■ பொருட்களின் விலைகளைக் கருத்திற் கொண்டு 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.






23. பூசணிக்காய் ஒன்றினதும் தக்காளிப்பழம் ஒன்றினதும் விலை எவ்வளவு?
(1) ரூபாய் 6.00 (2) ரூபாய் 8.00 (3) ரூபாய் 14.00

24. பூசணிக்காய் மூன்றினதும் தக்காளிப்பழம் ஐந்தினதும் விலை எவ்வளவு?
(1) ரூபாய் 58.00 (2) ரூபாய் 44.00 (3) ரூபாய் 62.00

■ பின்வரும் தகவலை அவதானித்து 25, 26, 27 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.



25. சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய மூன்று பாடங்களையும் விரும்பும் பிள்ளை யார்?
(1) உதயா (2) ராதா (3) காந்தன்

26. தேவி விரும்பாத பாடம் எது?
(1) சித்திரம் (2) நடனம் (3) சங்கீதம்

27. சித்திரப் பாடத்தை மட்டும் விரும்பும் பிள்ளை யார்?
(1) ராதா (2) தேவி (3) கலா

28. 81 தொடக்கம் 100 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது இலக்கம் 9 எத்தனை தடவை எழுதப்படும்?
(1) 10 (2) 11 (3) 12

www.ikeou.lk

29. "பாடசாலை செல்லும் வயதில் உள்ள சகல பிள்ளைகளும் பாடசாலைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்." இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது

(1) பிள்ளைகளுக்கு ஓய்வு அவசியம் இல்லை என்பதாகும்.

(2) சகல பிள்ளைகளுக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பது அவசியம்.

(3) பிள்ளைகள் வீட்டில் இருப்பது பெற்றோருக்கு இடஞ்சல் என்பதால்.

30. 20m நீளமும் 10m அகலமும் உடைய நிறக்கடதாசி ஒன்றிலிருந்து பக்க நீளம் 2m உடைய சதுர வடிவான எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்க முடியும்?

(1) 50 (2) 100 (3) 15

31. ரோஜா, செவ்வந்தி, அந்தூரியம் என்ற ஒழுங்கில் 21 பூச்செடிகள் நேராக நடப்பட்டுள்ளன. இவ்வரிசையில் நடுவில் உள்ள பூச்செடி எது?

(1) ரோஜா 2) செவ்வந்தி (3) அந்தூரியம்

32. கீழுள்ள அட்டவணையை விளங்கி இடைவெளிக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.



மாதம்	தை 31	மாசி 28	பங்குனி 31	சித்திரை 30	வைகாசி 31
நாட்களின் கூட்டுத்தொகை	31	59		120	

(1) 90, 151 (2) 151, 90 (3) 89, 150

33. மின் அலங்காரச் சரமொன்றில் சிவப்பு, பச்சை, மஞ்சள், என்ற ஒழுங்கில் மாறி மாறி 33 மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. 33 ஆவது மின்குமிழின் நிறம் என்ன?

(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்

34. இரு சமச்சீர்க் கோடுகளை மாத்திரம் வரையக்கூடிய உருவின் கீழ்க் கோடிடுக

(1)  (2)  (3) 

35. பாடசாலைப் பிள்ளைகளின் கண்காட்சியொன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து எட்டு நாட்களாக நடைபெற்றதெனின் கண்காட்சி முடிவடைந்த நாள் எது?

(1) வியாழக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) சனிக்கிழமை

www.ikeau.lk

36. **ஒற்றுமையே பலம்** என்பதை விளக்கும் பழமொழி

(1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

(2) சிறுதுளி பெரு வெள்ளம்

(3) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது


37. "எனக்கு ஓர் அண்ணனும் ஓர் அக்காவும் மாத்திரம் உள்ளனர். எனது அம்மாவுக்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர்." என்று ஒரு பிள்ளை கூறுகின்றது. இதற்கேற்க அப்பிள்ளை அக்குடும்பத்தில்,

(1) மூத்த மகள் ஆவாள்

(2) இளைய மகள் ஆவாள்

(3) இளைய மகன் ஆவான்

38. பின்வரும் திண்ம உருக்களை விளிம்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒழுங்கு படுத்தினால் பெறப்படும் விடையைத் தெரிவு செய்க




A B C

(1) A, C, B

(2) B, A, C

(3) C, B, A

39. உருவில் ஒன்றுக்கொன்று சமனான மரக்குற்றிகள் சிலவற்றைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்புக் காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 12

(2) 15

(3) 17

40. கவிதையொன்றின் நான்கு வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அதனைச் சரியாக ஒழுங்கு படுத்தினால் கிடைக்கும் விடை யாது?

A - இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!

B - வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்

C - எண்ணங்கள் செய்கைகள் யாவும்

D - அதில் மானுடர் வேற்றுமை இல்லை

(1) B D C A

(2) D C B A

(3) B C A D

www.ikedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகம்
தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை
மாதிரி வினாத்தாள் 1

(முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved)

முறிகண்டி நேசக்கரங்கள் கனடா அமைப்பின் அனுசரனையில் காரைதீவு அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் சமூகத்தின் ஏற்பாட்டில 2020 தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்கருதி வெளியிடும் கோவிட் 19 விடுமுறைகால மாதிரி வினாத்தாள்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை _ 2020

1 மணித்தியாலம் 15 நிமிடம்

வினாத்தாள் - II

சுட்டெண்:.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
* விடையின்கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக
* விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் **கீழ்க் கோடிடுக**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியாகும்	

www.keou.lk

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

அம்மா புதுப்பானையில் பாலையிட்டுப் பொங்க வைப்பார். அப்பா பயறு கலந்த அரிசியைப் பொங்கல் பானையில் போடுவார். சிறிது நேரத்தின் பின்னர் அதில் சக்கரை இடுவார். பொங்கல் பொங்கியதும் பழம், பாக்கு, வெற்றிலை, கரும்பு, இளநீர், என்பனவற்றுடன் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வணங்குவோம்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) பந்தியில் கூறப்பட்ட பண்டிகை எது?

.....

(ii) அம்மா என்பதன் எதிர்ப்பாற் சொல் எது?

.....

(iii) பொங்கலில் இடும் அரிசியுடன் கலக்கப்படும் தானியம் எது?

.....

(iv) பந்தியில் வந்துள்ள பெயர் அடைமொழிச் சொல் எது?

.....

(v) பந்தியில் வந்துள்ள உயர்திணைப் பெண்பாற் பெயர்ச்சொல் எது?

.....

(vi) தன்மைப் பன்மை எதிர்கால வினைச்சொல் எது?

.....

02. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைபிற்குள்ளிருந்து தெரிவு செய்க.

(i) நாம் மூத்தோரைக் ..... (கனம் / கணம்) பண்ணுவோம்.

(ii) விருந்துபசாரத்தில் ..... (சிற்றுண்டிகள் / சிற்ருண்டிகள்) வழங்கப்பட்டன.

03. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.

(i) நாம் அனைவரும் பேருந்தில் சுற்றுலா சென்றோம் ( )

(ii) தாத்தாவும் பேரனும் சந்தைக்குப் போனார் ( )

(iii) ஒவ்வொரு மாணவனும் பாராட்டப்பட்டனர் ( )

(iv) மான் கூட்டம் புலியைக் கண்டு சிதறி ஓடின ( )

04. பின்வரும் தொடர்மொழிகளின் ஒருமொழிச் சொல்லை எழுதுக.

(i) பேருந்தில் பயணச் சீட்டு வழங்குபவர் :.....

(ii) நம்ப முடியாத கதை :.....

www.ikedu.lk

சுட்டெண்:.....

05. பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.

(i) இ. பெ. கூ :.....

(ii) பி. ப :.....

06. பாடலில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித்(து) ஆடினால் போலுமை

.....

07. **பாங்கி** என்பதன் ஆண்பாற் சொல்லை எழுதுக

.....

08. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக

மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

09. **நீ எங்கே போனாய்?** என்ற ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக எழுதுக

.....

10. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க

அடம்பன் கொடியும் .....

11. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) நாளை - ..... (ii) பாடசாலை - .....

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  .....

(ii)  .....

13. பின்வரும் ஆங்கில வாக்கியம் தமிழில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

Who is shouting?

.....

14. பின்வரும் சிங்கள வாக்கியம் தமிழில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

அ(ப்)பி செல்லம் கறமு

.....

www.ikedu.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

நான் பாடம் படிக்கிறேன்

.....

16. முப்பத்தையாயிரத்து நூற்று நாற்பத்தொன்பதுடன் ஒன்றைக் கூட்டி வரும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17.

5	8
7	3

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு பத்தினிடத்து இலக்கம் 7 வரக்கூடிய வகையில் ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக?


.....

18. கட்டத்தினுள் உள்ள எண்களுள் 4 ஆல் மீதியின்றி வகுபடக்கூடிய எண் எது?

399	576
451	674


.....

19. கீழே காட்டப்பட்டுள்ள கோலின் நீளம் என்ன?



.....cm

20. கீழே தரப்பட்டுள்ள வலையுருவைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மத்தின் பெயர் என்ன?



.....

21. அடுத்து வரும் உரோமன் எண்குறிகளை எழுதுக.

XVII , ... , ...

22. போட்டியொன்று மு.ப 10.45 மணிக்கு ஆரம்பமாகி 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் நடைபெற்றது. போட்டி முடிவடைந்த நேரம் யாது?


.....

23. ரூபா 15.00 விலையுள்ள 7 பேனைகளையும் ரூபா 12.00 விலையுள்ள 6 பென்சில் களையும் விலைக்கு வாங்கிவிட்டு ரூபா 200.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

ரூபா .....

www.ikeu.lk

24. 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட சதுரமுகி வடிவிலான தாயக்கட்டையொன்றை ஐம்பது தடவைகள் மேலே சுண்டிவிடப்பட்டபோது விழுந்த இலக்கங்களின் எண்ணிக்கையினை பின்வரும் வரைபு காட்டுகிறது.



(i) இலக்கம் 5 விழுந்த தடவைகளின் எண்ணிக்கையினை வரைபில் நிழற்றிக் காட்டுக.


(ii) இலக்கம் 2 விழுந்த தடவைகளைவிட இலக்கம் 4 எத்தனை தடவைகள் அதிகமாக விழுந்துள்ளன?

.....

25. 12kg 500g சீனியை 500g கொண்ட எத்தனை பைகளில் அடைக்கலாம்?

.....

26. (i) நிறந்தீட்டப்படாத பகுதியைப் பின்னத்தில் தருக?



.....

(ii) நிறந்தீட்டப்பட்ட பகுதியைத் தசமத்தில் தருக?

.....

27. 321 இனிப்புகளை மூன்று பெட்டிகளில் சமனாக அடுக்கினால் ஒரு பெட்டியில் காணப்படும் இனிப்புகள் எத்தனை?

.....

28. 12l 500ml நீர் கொள்ளக்கூடிய குவளை ஒன்றில் கால்வாசிப் பகுதிக்கு நீர் ஊற்றப் பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்ப இன்னும் எவ்வளவு நீர் ஊற்ற வேண்டும்?

..... *l* ..... *ml*

29. 120 மாம்பழங்களில் $\frac{1}{4}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல மாம்பழங்கள் மாலினி, பாத்திமா, தேவி ஆகிய மூன்று நண்பிகளிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

(i) நல்ல மாம்பழங்கள் எத்தனை?.....

(ii) ஒரு நண்பிக்குக் கிடைத்த மாம்பழங்கள் எத்தனை?.....

www.lkedu.lk

30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமாக விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. கடற்கரை மணலைத் தோண்டி முட்டையிடும் பிராணி எது?
(1) ஆமை (2) முதலை (3) கடலாமை

31. இரவில் நடமாடும் பறவைகள்?
(1) ஆந்தை, கோட்டான் (2) ஆந்தை, கிளி (3) வெளவால், மைனா

32. இலங்கையில் மூவின மக்களும் வழிபடச் செல்லும் மலை?
(1) சீகிரியா (2) சிவனொளிபாதம் (3) பீதுறுதாலகால மலை

33. உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஒளடதபானம் தயாரிக்கக்கூடிய தாவரம்?
(1) தேயிலை (2) கொத்தமல்லி (3) ஆவரசு

34. செயற்கை நிறப்பொருட்கள், சுவையூட்டிகள் அடங்கிய உணவுகளை உண்பதால் ஏற்படக்கூடிய நோய் எது?
(1) புற்றுநோய் (2) நீரிழிவு (3) காசநோய்

35. நுளம்பின் மூலம் பரப்பப்படும் நோய் அல்லாதது எது?
(1) கழிச்சல் (2) மலேரியா (3) யானைக்கால்

36. மகாவலியாறு கடலுடன் கலப்பது
(1) கிழக்கு மாகாணம் (2) வட மாகாணம் (3) தென் மாகாணம்

37. வனைசில்லினைப் பயன்படுத்திச் செய்யப்படும் தொழில் எது?
(1) செங்கல் உற்பத்தி (2) மட்பாண்டம் (3) துணிகளுக்கு நிறமூட்டல்

38. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டால் அழிவுக்கு உட்படும் பகுதி அல்லாதது எது?
(1) கொழும்பு (2) பதுளை (3) காலி

39. காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணம் எது?
(1) வயலின் (2) தவில் (3) புல்லாங்குழல்

40. அதிக வித்துக்களைக் கொண்டுள்ள பழம் அல்லாதது
(1) மங்குஸ்த்தான் (2) மாதுளை (3) ஆனைக் கொய்யா

41. பாலில் இருந்து பெறப்படும் உணவுகளில் ஒன்றல்லாதது
(1) வெண்ணெய் (3) யோகட் (3) ஊறுகாய்

42. இக்குறியீடு உணர்த்துவது
(1) வைத்தியசாலை
(2) விடுதி வசதி
(3) சமாதானம்



[பக் 7 ஐப் பார்க்க

www.ikedu.lk

43. இலங்கை பற்றிய தவறான கூற்று

(1) நாற்புறமும் கடலால் சூழப்பட்ட தீவாகும்

(2) இந்து சமுத்திரத்தில் அரமந்துள்ளது

(3) இந்தியாவுக்கு வடக்கே அமைந்துள்ளது

44. முஸ்லிம்களின் பண்டிகைகளில் ஒன்று

(1) வெசாக் (2) தைப்பொங்கல் (3) றமழான்

45. இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த அந்நிய தேசத்தவர் அல்லாதோர்

(1) சீனர் (2) போத்துக்கேயர் (3) ஒல்லாந்தர்

46. நீரில் கரையும் பொருள் எது?

(1) தேங்காயெண்ணெய் (2) வினாகிரி (3) மெழுகு

47. பொலிசார் சில சோதனை நடவடிக்கைகளுக்காக நாயைப் பயன்படுத்துவது

(1) மற்றவர்களைக் கடிப்பதால் (2) கூர்மையான பார்வைத்திறன் இருப்பதால்

(3) மோப்பசக்தி அதிகம் இருப்பதால்


48. உலர்த்துவதன் மூலம் நீண்ட நாட்களுக்கு வைத்திருக்கக்கூடிய உணவு அல்லாதது

(1) மீன் (2) தர்ப்பூசணி (3) பாகற்காய்

49. தவளை முட்டையின் நிறம்

(1) கறுப்பு (2) வெள்ளை (3) மஞ்சள்

50. படத்தில் காட்டப்பட்டிருப்பவர் எமக்களித்த பெரும் சேவை



(1) இலவசக் கல்வி

(2) இலவச சுகாதாரம்

(3) நவீன போக்குவரத்து

51. இலங்கையின் தேசிய விளையாட்டு எது

(1) கிரிக்கெட் (2) காற்பந்து (3) கரப்பந்து

52. அரச இலச்சினையில் சௌபாக்கியத்தைக் குறிக்கும் குறியீடு

(1) தர்மச்சக்கரம் (2) நிறைகலசம் (3) நெற்கதிர்

53. நாக்கினால் சிறிய பூச்சிகளைப் பிடித்து உணவாக உட்கொள்வது


(1) பல்லி (2) கோழி (3) மயிர்க்கொட்டி

54. விவசாயத் தொழிலுடன் தொடர்புபடாதது

(1) நீர்ப்பிசாசு (2) குறடு (3) ஏர்

www.lkedu.lk

55. இக்குறியீடு குறிப்பது



(1) மேல்நோக்கிச் செல்லக்கூடியது

(2) இப்பக்கம் மேலே

(3) அருகருகே வைக்கவும்

56. **கொம்பு** என்ற சங்கீத உபகரணத்தைக் காட்டும் உரு எது?

(1) 


(2) 

(3) 

57. தண்டுத்துண்டங்களால் புதிய தாவரங்களைப் பெறக்கூடியது

(1) மரவள்ளி, பசளி (2) சோளம், கங்குண் (3) பசளி, சோளம்

58. படத்திலுள்ளவர் எமது நாட்டில் வித்திட்ட பெரும் சேவை



(1) போக்குவரத்துச் சேவை

(2) இலவசக் கல்வி

(3) நகர அபிவிருத்தி

59. பண்டையகால மன்னர்கள் செய்த நீர்ப்பாசனத் திட்டத்தினால் விருத்தி செய்யப்பட்டது

(1) அரிசி உற்பத்தி (2) மீன்பிடித் தொழில் (3) சுற்றுலாத்துறை

60. கீழேயுள்ள படத்தினை அவதானித்து பொருத்தமான மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களேனும் இருப்பதோடு எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் சரியாக இருக்க வேண்டும்.



(i) .....

.....

(ii) .....

.....

(iii) .....

.....

www.lkedu.lk